## முஸ்லிம்களுக்கு எதிரான

# கலவரங்கள்



01/01/2003

# உள்ளடக்கம்


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| முகவுரை | ----- |
| கருகிய மூதூர் | 01 |
| வாடிவிட்ட வாழைச்சேனை | 08 |
| தீயிலெறிந்த மாவனெல்லை | 14 |
| தாக்கப்பட்ட பேருவளை | 19 |
| குருதி படிந்த மடவலை | 22 |
| நாம் அடிமைகளல்ல | 24 |
| முடிவுரை | ----- |

## முன்னுரை

இலங்கை முஸ்லிம்களை பொருத்தமட்டில் எமது கடந்தகால வரலாற்றைவிட நிகழ்கால வரலாறு மிகுந்த முக்கியத்துவம் பெரும் ஒன்றாக எண்ணத்தோன்றுகின்றது. கடந்தகாலங்களில் இத்தேச மக்களுடன் மிகுந்த அண்ணியோண்ணியமாகவும் தேசப்பற்றுடனும் வாழ்ந்து இத்தேசத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியுள்ளோம்.

அல்லாஹ் மனிதர்களில் பிரிவுகளாகவும், கோத்திரங்களாகவும் உருவாக்கி இருக்கின்றமை பரஸ்பர ஒருவரையொருவர் புரிந்து கொள்வதற்கே என அல்குர்ஆனில் குறிப்பிடுகின்றான். இனவாதம் இஸ்லாத்தின் பார்வையிலும், விஞ்ஞானத்தின் பார்வையிலும் எந்தவிதமான அடிப்படையும் அற்றது. ஒருவர் தான் சார்ந்துள்ள இனத்தை நேசிப்பதில் இனவாதமாக கொள்ள முடியாது. மாறாக மாற்று இனத்தவர்கள் மீது ஆக்கிரமம் செய்ய முற்படுவதே இனவாதமாக கொள்ளப்படுகின்றது. தன்னைச் சூழ உள்ளோரை நேசிப்பது மனித இயல்பு. தனக்கும் தான் சார்ந்துள்ள இனத்துக்கும் ஆபத்துக்கள் வரக்கூடும் என எண்ணுவது மனித இயல்பு. இவ் அச்ச உணர்வே பலபோது இன முரண்பாடுகளுக்கு காரணங்களாக அமைந்துவிடுகின்றன.

அண்மைக் காலமாக முஸ்லிம் சமூகத்தின் மீது மிகத் திட்டமிட்டு நடத்தப்படும் தாக்குதல்களினால் அச் சமூகம் பிர சமூகங்களை சந்தேக கண்ணோடு பார்க்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாக்கப் பட்டுள்ளது. எனவே இவ்வாறான காலகட்டத்தில் முஸ்லிம்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை முஸ்லிம்களுக்கு அறிமுகப்படுத்தி இத்தகையதொரு இக்கட்டான நிலைகளில் எத்தகைய நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்பதை சிந்திக்க செய்வதே இந் நூல் வெளியீட்டின் நோக்கமாகும்.

இறைவன் எமது இம் முயற்சியை ஏற்றுக்கொள்வானாக.

ஆமீன்.

2058

## கருகிய மூதூர்

மார்ச் மாதம் கடைசிப் பகுதியில் மூதூர் மெதடிஸ் கிரிஸ்தவ தேவாலயத்துக்குப் பொருப்பான அருள் திரு எமானுவேல் அவர்களின் தலைமையில் சென்ற குழுவொன்று ஜெபல் நகர் எனும் முஸ்லிம் கிராமத்தை ஒட்டியிருந்த மூன்றாம் கட்டை மலை முகடுகளில் சுமார் 10க்கும் மேட்பட்ட சிலுவைகளை நாட்டிவிட்டு வந்தனர். எமானுவேல் அவர்களிடம் இதுபற்றிக் கேட்டபோதுதான் எந்தவித பின்னோக்கமுமின்றி வெறுமனே மத வழிபாட்டுக்காக அதனை நாட்டியதாகவும் அதனை மலையில் பின் புறத்திலிருந்து தாங்கள் வழிபாடு செய்வதாகவும் 17.06.2002 அன்று மூதூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்தார். இக்கூட்டத்தில் அமைச்சர்களான ரவூப் ஹகீம், கரு ஜயசூரிய, ஜோன் அமரதுங்க, மட்டக்களப்பு திருமலை ஆயர் அருட் திரு கிங்ஸ்லி சுவாமிப் பிள்ளை மற்றும் திருமலை தமிழ் பாராளுமன்ற உருப்பினர்களும் இடம்பெற்றிருந்தனர்.

அரசாங்கத்துக்கு சொந்தமான இம்மலைப் பிரதேசத்தில் யாருடைய அனுமதியோடு சிலுவைகள் நடப்பட்டன? கிரிஸ்தவ மத குருமார்களின் தலைமை எந்த வகையில் அனுமதி வழங்கியது? அரசாங்கத்தின் அனுமதி இதற்கு பெற்றுக் கொள்ளப்பட்டதா? என்பதெல்லாம் புரியாப் புதிராகவே இருக்கின்றது.

மூன்றாம் கட்டை மலை முகடுகளின் உச்சியில் பொலிஸ் காவலரன் ஒன்று அமைந்துள்ளது. அத்தோடு முஸ்லிம் பிரதேசத்துக்கும் மலைக்குமிடையில் சுமார் 3 கிலோ மீற்றர் தூரம் இருக்கும் இப்பாதையின் இடைநடுவில் இராணுவப் படைமுகாம் ஒன்றும் அமைந்துள்ளது. இத்தனை தடைகளையும் மீறி இச்சிலுவைகளை முஸ்லிம்கள் உடைப்பது எந்த வகையிலும் சாத்தியம் இல்லை. அவற்றை உடைப்பதனால் முஸ்லிம்களுக்கு எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை. மற்றுமின்றி எந்த அறிவுஜீவியாலும் முஸ்லிம்கள் உடைத்தார்கள் என்ற வாதத்தை ஏற்றுக்கொள்ளவே முடியாது.

சிலுவை நடப்பட்டு ஒரு சில தினங்களுக்குள் மூதூர் பிரதேச செயலாளர் ஆ. தங்கராசா அவர்களிடம் சமூக நல்லினக்க சங்கங்கள் இந்நிகழ்வு சமூகங்களின் மத்தியில் குறிப்பாக இந்து இஸ்லாமியர்களின் மத்தியில் சல சலப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனை உடனடியாக தடுக்க வேண்டும் என்று முன்னறிவித்தல் கடிதம் கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் அவர் எடுக்காத போது ஞாபகமூட்டல் கடிதமொன்றும் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அவர் உறிய நேரத்தில் இத்தகுந்த நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த இன நெறிசல்கள் ஏற்பட்டிருக்காது. எனவே சிலுவை உடைத்தவர்களை துருவி துருவி ஆறாய்ந்தவர்கள் சிலுவையை நாட்டி

இந்த இன முறன்பாட்டுக்கு வழிகோறியவர்களை சட்டத்திற்கு முன் கொண்டு வர வேண்டும். அப்போது மாத்திரமே இவ்வாறான நெறிசல்கள் இனி நிகழாது தடுக்க முடியும் மட்டுமின்றி இவ்வாறான செயலில் ஈடுபடுபவர்களுக்கு ஒரு படிப்பினையாகவும் அமையும்.

இது சம்பந்தமாக திருமலை மாவட்ட பாராளுமன்ற உருப்பினர் திடீர் தௌபீக், புலிகளின் திருமலை அரசியல் பொருப்பாளர் ரூபன் என்பவரோடு பேசியபோது "இது முஸ்லீம்களால் செய்யப்பட வில்லை" எனக் கூறினார் என திடீர் தௌபீக் மூலம் தெரிய வந்துள்ளது. இவர் கருத்து இப்படியிருக்க சிலுவைகளை முஸ்லிம்களே உடைத்தார்கள் என அபத்தமான வீன் பழியை அப்பாவி முஸ்லிம்கள் மத்தியில் சுமத்தி மிகப்பயங்கரமான தாக்குதல்கள் அவர்கள் மீது கட்டவில்க்கப்பட்டதை யாரால் தான் நியாயப்படுத்த முடியும்?

சிலுவை 2002.06.20 ஆம் திகதி உடைக்கப்பட்டதாக இவர்களால் அறியப்பட்டது. அன்று மாலை சர்வதேச குழு அவ்விடத்திற்கு சென்று நிலமையை அறாய்ந்து வந்தது. அன்று மாலை அப்பாதையினூடாக சென்ற முஸ்லிம் இளைஞர்கள் படுமோசமாக தாக்கப்பட்டார்கள். அவ்வேளை மூதூர் விடுதலைப் புலிகளின் அரசிலல் பணி மணையில் கடமை புறிபவர்கள் அங்கு இருந்துள்ளனர். தாக்கப்பட்ட முஸ்லிம் இளைஞர்கள் அவர்களிடம் தங்களைக் காப்பாற்றும் படியும் தங்களுக்கு நியாயம் வழங்குமாறும் கோறியுள்ளனர். தமது கோரிக்கைக்கு செவி சாய்க்காத போது ஆத்திமுற்ற பாதிக்கப்பட்ட வர்களும், உறவினர்களும் புலிகளின் காறியாலயத்தை முற்றுகை இட்டனர் என தெறிவிக்கப்படுகின்றது. இதே வேலை தமிழ் மக்கள் புலிகளின் காரியாலயம் சேதப்படுத்தப்பட்டமை மற்றும் வேலனையில புலி உருப்பினர்கள் தாக்கப்பட்டமை என்பவற்றுக்கு எதிராக ஹர்த்தால் ஒன்றை அனுஷ்டிப்பதாக தெரிவிக்கும் சுவரொட்டிகள் மூதூரின் பல பாகங்களிலும் ஒட்டப்பட்டிருந்தன. இதையடுத்து மூதூர் பள்ளிவாசல் தலைவர் ஜவாப்தீன் இந்த ஹர்தாலுக்கு ஆதரவு வழங்குமாறும் கேட்டுக் கொண்டார். அதற்கமைய தமிழர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் மூதூர் முஸ்லிம்கள் முழுக் கடையடைப்புச் செய்து பாடசாலை, மத்ரஸாக்களை மூடி பூரண ஆதரவு வழங்கினர்.


இறுதியில் நடந்தது என்ன? ஹர்த்தால் பேரணி வந்தவர்கள் கையில் பதாதைகளுக்குப் பதிலாக பாராங்கத்திகளையும், சுலோகங்களுக்கு பதிலாக தூசன வார்த்தைகளையும் பேசிக்கொண்டு வந்தார்கள். வீதியின் இரு மருங்கிலும் இருந்த கடைகளையும், வீடுகளையும் உடைத்தார்கள். அரச படை கண்காணிப்பிலேயே முஸ்லிம்களின் சொத்தழிப்புகள் நடைபெற்றன.

இது பற்றி எம்.வை. சாதிக் எனும் கடை உரிமையாளர் கருத்து தெரிவிக்கையில் *காலையில் நாங்கள் எங்களது மூடப்பட்ட கடைகளைப் பார்க்க வந்தபோது பொலிஸ் உதவிப் பரிசோதகர் உற்பட பாதுகாவளர்கள் நிறையப் பேர் கடைகளுக்கு முன்னால் குவிந்திருந்தனர்.*



*அந்த நேரத்தில் ஊர்வலத்தில் வந்தவர்கள் என் கடை முன் கதவை உடைத்து உள்ளிருந்த சாமான்களை சூறையாடிக் கொண்டிருந்த போது அதனை நாங்கள் தடுக்க முற்பட்டோம். எங்களை கண்ணீர்ப் புகை அடித்து களைத்தனர். நாங்கள் அன்றாடம் கடன்பட்டு உண்பவர்கள் அரசாங்கம் இப்படிச் செய்தால் நாங்கள் யாரை நம்புவது? ஒன்றில் எங்கள் சொத்துக்களை அரசாங்கம் பாதுகாக்க வேணடும் அன்றேல் இந்த ஊரை விட்டே போக வேண்டும்* என கூறினார்.

மர்ஷக்கா என்ற பெண்மணி (வயது 42) *பெறிய பாவம்நான் என் பிள்ளைகளோடு இவர்கள் சென்ற பேரணியைப் பார்த்துக் கொண்டு நின்ற போது திடீரென தமிழ் கும்பல் எங்களை ஏசிவிட்டு கதிரை, அழுமாரிகளையெல்லாம் உடைத்துவிட்டு எனக்கும் எனது வயதுக்கு வந்த பெண் பிள்ளைகளுக்கும் அடித்து இழுத்து எரிந்துவிட்டு என் வீட்டில் இருந்த 16 ஆடுகளையும் வெட்டியும், அடித்தும் கொன்றுள்ளதோடு சில ஆடுகளை கொண்டு சென்றுள்ளனர். இவர்களுக்கு அல்லாஹ் தன்டனை கொடுப்பான்.* என்று தன் முந்தானை மல்க கதறி கதறி அழுது கூறியிருக்கின்றாள்.




ஜின்னா நகர் மூதூர் ஒன்றில் வசிக்கும் எஸ். ஜய்னுலாப்தீன் (வயது48) எனும் முதியவர் மலையடிவாரத்தில் மேற்குத் திசையில் உள்ள சம்மாந்துரை எனும் இடத்தில் தனது வயலில் வேலை செய்து கொண்டிருந்தார் அவர் தனக்கேற்பட்ட துயரத்தை இப்படிச் சொன்னார். *அப்போது இருவர் தொலைவில் துரத்தி வந்ததாகவும் ஒருவரின் கையில் 'சைட்அடியன்' எனும் அவர்களால் உருவாக்கப்பட்ட நாட்டுத் துப்பாக்கியும் மற்றவரின் கையில் கத்தியுமாக என்னை நோக்கி வந்தனர். நான் ஓடலானேன். வயது முதிர்ந்த என்னால் ஓட முடியவில்லை அப்போது துப்பாக்கி வைத்திருந்தவன் துப்பாக்கியால் எனது இரண்டு புயங்களிலும் அடித்தான். அலறினேன். யாரேனும் உதவமாட்டார்களா என கதறினேன். அப்போது தான் தூர வயல்களில் நின்றவர்கள் என்னை நொக்கி வரவே என்னை அடித்தவன் ஓடலானான். கத்தியோடு வந்தவன் இடையிலே வாயக்காலில் விழுந்துவிட்டான். இல்லையேல் என்னை வெட்டி கொன்டிருப்பான்.*

அப்படியானால் அடாவடித்தனங்களை நிகழ்த்தி வந்தது யார்? பஞ்சநூருடன் பேரணி முடிவடைந்திருந்தால் மூதூர் நகரத்தினுல் டெக்டரோடு வந்தவர்கள் எங்கிருந்து வந்தார்கள்? இதற்கு திரு சச்சிதானந்தம் என்ன பதில் சொல்லப் போகிறார்? "மூதூர் நகரப் பகுதியில குறிப்பாக முஸ்லிம் மக்கள் வாழ்கின்ற பகுதியில் கடைகள் அனைத்தும் பூட்டப்பட்டு இந்த கண்டனப் பேரணிக்கும், ஹர்த்தாலுக்கும் ஆதரவு தெரிவிக்கும் வகையில் செயற்பாடுகள் இடம் பெற்றது" எனவும் சச்சிதானந்தம் கூறியபோது "அப்போது ஏன் வன்முறை வெடித்தது என்று *B.B.C.* செய்தியாளர் ஆனந்தி கேட்டார்" அதற்கு "இதே நேரத்தில குறிப்பாக ஒரு குறிப்பிட்ட குழு இளைஞர்கள் மூதூர் நகரத்தில உளாவிக் கொண்டிருந்தார்கள். இந்த இளைஞர்க் குளுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் சம்பவமொன்று வன்முறையாய் வெடிக்கின்ற ஒரு நிலைமையை ஏற்படுத்தியது. இந்த மோதலின் போது 3 முஸ்லிம் இளைஞர்கள் காயத்துக்குள்ளானார்கள்" என்று பதிலளித்தார்.

எனவே முஸ்லிம் சமூகம் தனது கடைகளை அடைத்தும் பாடசாலைகளை மூடியும் இருக்கின்ற தருனத்தில் ஒரு குழுவென்று குறிப்பிட்ட அவர் அதனை தெளிவாக தமிழ் குழுவென்று கூறாதது ஏன்? இது தான் பத்திரிகை தர்மமா? அந்த தமிழ் குழு தாக்கியதால்தான் 3 முஸ்லிம் இளைஞர்கள் படுகாயத்துக்குள்ளானார்கள். ஏனெனில் முஸ்லிம்கள் மோதுவதற்கு வரவில்லை. தமிழர்களின் ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்கவே முன்வந்தார்கள். மூதூரில் எல்லா இடங்களிலும முஸ்லிம் குழுக்கள் இயங்குவதாக கதைகளை கட்டுகின்ற தமிழ் ஊடகங்கள் வன்முறைகளில் ஈடுபடுகின்ற தமிழ் தீவிரவாத குழுக்கள் சம்பந்தமாக எதையுமே குறிப்பிடாமை கவலையை அழிக்கின்றது. சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் விழைவிப்பவர்கள் யாராக இருப்பினும் அவர்கள் இனங்காணப்பட்டு சட்டத்துக்கு முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் நிலவமுடியாது. ஆனால் பிரச்சினைகளை மிக நேர்மையாகவும் பக்கச் சார்பின்றியும் அனுகுவது அனைத்து தரப்பினர்களதும் தார்மீக பொருப்பாகும். ஒரு தரப்பின் மீது பழியை சுமத்துவது மிக பாரியதொரு அநீதியாகும்.

தமிழ் குழுக்கள் பேரணியை நடாத்திய அன்றிரவு செல்வராசா அன்தோனி என அழைக்கப்படும் ஜெயா என்ற *C.T.B.* பஸ் ஓட்டுனர் தனது பஸ்ஸை திருமலையிலிருந்து மூதூர் நோக்கி இரவு 12.15ளவில் எடுத்துச் சென்ற போது அதில் மூதூர் நொக்ஸ் வீதியைச் சேர்ந்த அஸீஸ் ஹாஜியார் என்பவரும் பயனித்திருந்தார். அஸீஸ் ஹாஜியார் 64 ஆம் கட்டை எனும் இடத்தில் வைத்துக் கீழே இறக்கப்பட்டார். அவர் தனக்குநேர்ந்த துயரத்தை பின்வருமாறு விளக்கினார். *பஸ்ஸிலிருந்த என்னை அடித்து இழுத்து கீழே இறக்கினர். கிராமத்தில் இருந்த சிறுவர்கள், பெரியோர், பெண்கள் அனைவருமே என்னை தாக்கினார்கள். அப்போது என்னால் அடிகள் தாங்க முடியாமல்*






*அழுதேன். பயனொன்றும கிட்டவில்லை. இருந்தும் காலை வேலை என்னை துவிச் சக்கர வண்டியில ஏற்றிக்கொண்டு கொல்வதற்கென்று எடுத்துச் சென்றனர். எதேச்சையாக நான போகின்ற வழியிலுள்ள அரச படை முகாம ஒன்றுக்குள் தப்பியோடி விட்டேன். எனது இரண்டு கைகளில் நடுப்பகுதிகளும கத்தியால் அருக்கப்பட்டன. இன்னும் எவ்வளவோ நடந்தது.* கவலையோடும கண்ணீரோடும் கூறினார். இதன் தொடரிலேதான் முஸ்லிம்களின் புனிதஸ் தளமான 4ம் கட்டை ஜபர் நகரிலுள்ள மஸ்ஜிதுன் நூர் பள்ளிவாயல் எரிக்கப்பட்டது. 1912 ஆம் ஆண்டுக்கு சுமார் இங்கு 186 குடும்பங்கள் வாழ்ந்து வந்தனர். அப்பொது ஓலைக் கிடுகளால் கட்டப்பட்டிருந்த மஸ்ஜிதுன் நூர் 1915 ஆம் ஆண்டு ஜும்ஆ பள்ளியாக மாறியது. 1983 க்கு பின்னர் ஏற்பட்ட இனப் பிரச்சினை காரணமாக இங்கு வாழ்ந்த முஸ்லிம்கள் இடம்பெயர்ந்து மூதூர் நகருக்குள் குடியேறினர். வயல் வேலைகளுக்காக செல்பவர்கள் இங்கு தொழுது வருவது வழக்கம். பேரணி இடம்பெற்ற அன்று இப்பள்ளிவாயல் சுவர்களில் மோசமான வார்த்தைகள் எழுதப்பட்டிருந்ததோடு பள்ளி கிணற்றில் மலம் களிக்கப்பட்டு சிலுவை ஒன்றையும் அதற்குள் வீசி எரிந்தார்கள். பள்ளிவாயல் முற்றாக நாசமாக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு புலிகளுக்குச் சார்பாக ஹர்த்தாலில் ஈடுபடுவதாக கூறிக்கொண்டு பேரணியில் வந்த தமிழ் பேரணிக் குழுக்கள் அமைதியாகவும் சமாதானமாகவும் தங்களது ஹர்த்தாலை அனுஷ்டித்திருந்தால் பிரச்சினை இந்தளவுக்கு வன்முறையாக வெடித்திருக்காது. பேரணியை கொந்தளிப்பு மிக்கதாக மாற்றி முஸ்லிம்களை தாக்குகின்ற கலமாகவும் அவர்களது சொத்துக்களை அழிக்கின்ற ஊர்வலமாகவும் அதனை ஆக்கிக் கொண்டதால் விரும்பத்தகாத பல விளைவுகள் ஏற்பட்டன. துரதிஷ்ட வசமான இந்த நிகழ்வு தமிழ் முஸ்லிம் உறவுகளில் கனிஷமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

# வாடிவிட்ட வாழைச் சேனை

கடந்த 27.06.2002 இல் அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தாலின் போது ஆயுதபானியாக வந்த தமிழர்கள் வாழைச்சேனை நகரில் கடைகளை திறக்குமாறு முஸ்லிம் வர்த்தகர்களை வற்புறுத்தினர். மேலும் பஸ்ஸுகளையும் ஓட வைக்க முனைந்தன. இம்முயற்சி தோல்வி அடைந்ததனால் ஆத்திரமடைந்த ஆயுதபானிகள் வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலைக்கு முன்னால் வைத்து முஸ்லிம்களுக்கு சொந்தமான மோட்டார் சைக்கில் ஒன்றையும் 6 துவிச்சக்கர வண்டிகளையும் கைப்பற்றி எரித்ததோடு வாழைச்சேனை நகரில் உள்ள முஸ்லிம்களுக்கு சொந்தமான கடைகளையம் தீயிட்டுக் கொழுத்தினர். அதைத் தொடர்ந்து மட்/வை. அஹமத் வித்தியாளய பாடசாலைக் கொட்டிலையும் எரித்தனர்.



அதிர்ச்சிகரமான இச் சம்பவத்தை அடுத்து வாழைச்சேனை ஜும்ஆப் பள்ளியை பாதுகாக்க வருமாறு ஒலி பெருக்கியினூடாக அறிவித்தல் கொடுக்கப்படவே முஸ்லிம்கள் அவ்விடத்திற்கு திரண்டு வந்தனர். இதனை கண்ட தமிழ் ஆயுத பாணிகள் இவர்கள் மீது கைக்குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தினர். இதனால் ஷஹாப்தீன்(37), ஷலீம்(15) ஆகிய இருவரும் இஸ்தலத்திலே கொல்லப்பட்டனர். இச்சம்பவத்தில் படுகாயமடைந்த 42 பேரில் அன்வர்(20) ஹாஜா முஹியத்தீன்(39) ஆகிய இருவரும் பொலன்னருவை கண்டி வைத்தியசாலையில் காலமானார்கள்.

இதேவேலை மீன்களை விற்பனைக்காக எடுத்துச் சென்ற 3 முஸ்லிம் மீனவர்கள் கருவாக்கேனி தமிழ் எல்லகை கிராமத்தில் வைத்து ஆயுதபானிகளால் கடத்திச் செல்லப்பட்டு பொல்லுகளாலும் கத்தியாலும் தாக்கப்பட்டுள்ளனர். இவர்களது ஷைக்கில் வண்டிகளும் ஒன்று குவிக்கப்பட்டு எரிக்கப்பட்டன. இவர்களும் பொலன்னருவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.



இது தவிர தமிழ் பகுதிக்கு சமையலுக்கு சென்ற ஜனுதீன்(26) சானுதீன்(20) ஆகிய இரு சகோதரர்கள் புலிகளால் வெட்டிக் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டன. இவர்கள் புதைக்கப்பட்ட இடம் 30.06.2002 ஞாயிறு பொலிஸாரின் தேடுதல் முயற்சியில் கண்டு பிடிக்கப்பட்டது. இந்த மையத்துக்களை எடுக்க பொலிஸாருடன் 5 முஸ்லிம்கள் மட்டு மாவட்ட நீதிபதி, பொலிஸ் அத்தியட்சகர், சுமார் 200 இராணுவத்தினர் ஆகியோர் சென்றிருந்தனர் எனினும் புலிகள் மையத்துக்களை வழங்குவதாயின் 5 முஸ்லிம்களையும் தம்மிடம் ஒப்படைக்குமாறு கோறி மையத்துக்களை வழங்க மருத்ததோடு அவர்களின் கண் முன்னேயே அவற்றை தீயிட்டு எரித்தனர்.

**27.06.2002 மாலை 4.00 மணி**


தமிழ் ஆயுதபாணிகளின் இத்தகைய கோரமான துப்பாக்கிச் சூட்டினால் இஸ்தலத்திலேயே மரணமானதைக் கண்டு ஆவேசமடைந்த சில முஸ்லிம் இளைஞர்கள் அவ்வாயுத பாணிகளை நோக்கி கற்களை வீச தொடங்கினர். இந்தச் சந்தர்ப்பத்தில் ஆயுத பணிகளுடன் அழைத்து வரப்பட்ட தமிழர்கள் முஸ்லிம்களின் கடைகளுக்கு தீ வைக்க ஆரம்பித்தனர். பல கடைகள் கொள்ளையிடப்பட்டன. இதனால் முஸ்லிமகளுக்கு சொந்தமான சுமார் 245 கடைகள் தீக்கிறையாக்கப்பட்டன. அவற்றுள் பெரும்பாலானவை முற்றாக எறிந்து சாம்பளாகிற்று. இதனால் கோடிக் கணக்கான ருபாய்கள் நஷ்டமேற்பட்டுள்ளன. தமிழர்களுக்கு சொந்தமான 7 கடைகள் சேதமாக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. இதே போன்று மீன் பிடிக்க வாகனேறிக் குளத்துக்கு சென்ற வேலை கடத்தப்பட்ட சுமார் 3 பேறும் பிரயாணத்தின் போது கடத்திச் செல்லப்பட்ட 2 பேருமாக 5 முஸ்லிம்கள் கடத்தப்பட்டு கொல்லப்பட்டனர்.

**28.06.2002 செம்மன்னோடைச் சம்பவம்**

கடந்த 28.06 ஆம் திகதி ஓட்டமாவடிப் பகுதியிலுள்ள செம்மன்னோடை எனும் முஸ்லிம் எல்லை கிராமத்தில் முஸ்லிம்கள் தனது வெள்ளிக் கிழமை ஜும்ஆத் தொழுகையில் கலந்து கொள்வதற்காக செம்மன்னோடை தக்வா ஜும்ஆப் பள்ளிவாசலில் முந்தலை அடைந்த போது எல்லைக் கிராமத்திலிருந்து ஆயுத சகிதம் வந்த ஒரு கும்பல் முஸ்லிம்களை நோக்கி 5 கைக்குண்டுகளை பள்ளிவாசல் முந்தலை நோக்கி வீசினர். இதனால் 7 பேர் படுகாயமுற்றார்கள். இச்சம்பவம் சுமார் 12.45 மணியளவில் இடம்பெற்றது. 27, 28 ஆம் திகதியில் வாழைச்சேனை, ஓட்டமாவடிப் பகுதிகளில் இடம்பெற்ற முஸ்லிம்களின் கடைகள் மீதான தீவைப்பு, சொத்தழிப்பு மற்றும் உயிர் சேதங்களை பார்வையிட இராணுவத் தளபதி சுனில் தேன்னகோன், அமைச்சர்களான நூர்தீன் மசூர்,

அதாவுல்லாஹ், அப்துல் காதர், முன்னால் பாராளுமன்ற உருப்பினர் அலிஸாஹிர் மௌலானா போன்றவர்கள் வாழைச்சேனை நகரத்துக்கு வருகை தந்ததன் பின்னர் வாழைச்சேனை கோறலைப்பற்று பிரதேச செயலகத்தில் திமிழ் முஸ்லிம் பிரதிநிதிகள் உள்ளிட்ட சமாதானக் கூட்டமொன்றை நடாத்துவதற்கு ஏற்பாடாக விருக்க, அதற்கு முன்னரே முஸ்லிம்கள் மீதான இக்கைக்குண்டுத் தாக்குதல் இடம் பெற்றன. வீசப்பட்ட 5 கைக்குண்டுகளில் 3 கைக்குண்டுகளே வெடித்தன. இதன் காரணமாக காயமடைந்த 9 பேயரில் ஒருவர் (முபாரக்) கண்டி வைத்தியசாலையில் காலமானார். இக்கைக்குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் பின்னர் ஓட்டமாவடி மீராவோடை பிரதேசம் முழுதும் பதட்டம் நிலவியது. செம்மன்னோடை, பத்ருதீன் நகர் எல்லை முஸ்லிம்கள் ஓட்டமாவடியை நோக்கி இடம் பெயற வேண்டி ஏற்பட்டது.

**28.06.2002 இரவு**



பிற்பகல் 12.45 மணியளவில் இடம்பெற்ற கைக்குண்டு தாக்குதலை அடுத்து எல்லைப் பிரதேசங்களில் அரச படையினர் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டதோடு அன்று வாழைச்சேனை கோறாலைப்பற்று பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற சமாதானக் கூட்டத்தின் பிரகாரம் தமிழ், முஸ்லிம் உற்பட 30 பேர் கொண்ட சமாதானக் குழுவும் நியமிக்கப்பட்டது. இவ்வாறு சமாதானத்தையும் அமைதியையும் நிலைநாட்டுவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதும் இவை எதனையுதம் மதிக்காத ஆயுத பாணிகளும் தமிழ் கும்பல்களும் தொடர்ந்து வன்முறைகளில் ஈடுபட்டனர். 28.06.2002 இரவு முஸ்லிம்களுக்கு சொந்தமான சுமார் 20 மீன்பிடி மோட்டார் படகுகளுக்கு 'நாஸிவன்' தீவிலிருந்து வந்த ஆயுத பாணிகள் இருவர் பெற்றோல் ஊற்றி தீ வைத்தனர். அப்பொழுது அங்கிருந்த ஒரு முஸ்லிம், தீவிரவாதிகளின் இம்முயற்சியை கண்டதனால் மிகப் பாரியதொரு அழிவு தவிர்க்கப்பட்டது. எனினும் அப்துல் காதர்(40) என்பவருக்கு சொந்தமான படகொன்று முற்றாக எறிக்கப்பட்டதோடு மேலும் இரு படகுகள் கனிசமாக எறிந்த நிலையில்



அணைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்தினால் அன்றிரவு பிரதேசம் எங்கும் பதற்றமும் பீதியும் நிலவியது.

**30.06.2002**

முஸ்லிம்கள் மீதான பலத்த வன்முறைகளும் அடாவடித்தனங்களும் கட்டவிழ்க்கப்பட்ட வாழைச் சேனை பிரதேசத்துக்கு 30.06.2002 அன்று அமைச்சர்களான மிலிந்த மொறகொட மற்றும் உள்நாட்டு அமைச்சின் செயளாலர் ஜுனைத் ஆகியோர் சென்று சம்பவம் நடைபெற்ற இடங்களை பார்வையிட்டனர். பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து அமைதியாக இருக்குமாறு கோறியதோடு இராணுவ அதிகாரிக்கும் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதில் கண்டிப்பாக இருக்குமாறு கட்டளையிட்டனர். இவர்கள் வாழைச்சேனையிலிருந்து கொழும்பை நோக்கி வந்த அடுத்த அரை மணி நேரத்திலேயே இஸ்மாயீல், சுபைர் ஆகிய இருவருக்குச் சொந்தமான 70,000 பெறுமதியான ஆறு மாடுகளை ஆயுதபாணிகள் கடத்திச் சென்றுள்ளனர். இச்சம்பவம் பொலிஸ் மற்றும் இராணுவப் படையினரின் முன்னிலையிலேயே இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. வன்முறையில் ஈடுபடுகின்ற, வன்மறையைத் தூண்டுகின்ற எவர் மீதும் துப்பாக்கி பிரயோகம் செய்வதற்கான அதிகாரம் இராணுவத் தரப்பிற்கு உயர் அதிகாரகளினால் வழங்கப்பட்டிருந்தும் இவ்விடயத்தில் அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்காதது குறித்து பிரதேச மக்களிடையே பலத்த பீதியும் அச்சமும் சந்தேகங்களும் எழுந்தன.

வட கிழக்கு முஸ்லிம்களின் தற்போதைய நிலை மிகவும் பரிதாபகரமாக உள்ளது. முஸ்லிம்கள் மீது தொடரும் வன்முறைகளையோ உயிர்ச் சேதத்தையோ தடுக்க முடியாத நிலையில் அரச பாதுகாப்பு படையினர் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தினால் தடுமாறி நிற்கின்றனர். அடுத்த பக்க முஸ்லிம்களை அமைதியாக இருக்க கோறி அறிக்கை விடும் ஆயுத பாணிகள் திறைக்குப் பின்னால் தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர். ஊடகங்கள் அனைத்தும் முஸ்லிம்களுக்கு எதிரான வகையிலும் தமிழருக்கு சார்பான வகையிலும் செய்திகளை திரித்தும் புணைந்தும் வெளியிட்டு வருகின்றனர். எவ்வித தற்காலிக ஒழுங்குகளோ அமைப்பாக்கங்கமோ இல்லாத அப்பாவி முஸ்லிம்கள் தமக்கு எதிராக அடுத்த கணம் என்ன நிகழுமோ என்ற அச்சத்தில் எதிர்காலத்தை நோக்கி பீதியோடும் பெறு மூச்சோடும் வாழ வேண்டிய துயர் மிக்க நெருக்கடிக்குள் தல்லப்பட்டிருக்கிறார்கள்.

தற்போதைய மூதூர் வாழைச்சேனை கலவரங்களுக்கு முன்னால், சென்ற வருட போர்க் காலப்பகுதியில் மூதூர் முஸ்லிம்களை அப்பிரதேசத்திலிருந்து

அகற்றுவதற்கான சார்புத் திட்டங்களை விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக செய்து வந்திருக்கின்றார்கள். இதனை உறுதிப்படுத்தும் கடந்த கால நிகழ்வுகள் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகின்றோம்.

கடந்த 26.10.2001 அன்று வெள்ளிக் கிழமை மூதூர் பொலிஸ் இராணுவக் காவலரன் மீது புலிகள் ஷெல் வீச்சுக்களை நடத்தினர். ஆனால் அத்தாக்குதலில் அப்பகுதி முஸ்லிம்களுக்கே பாரிய அழிவு ஏற்பட்டுள்ளது.

**சேதங்களுக்குள்ளான கடைகளில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட கடைகள் பற்றிய ஒரு சிறு தரவை கீழே தருகின்றோம்.**

| கடைகளின் வகை | அழிவுற்ற விதம் | எண்ணிக்கை | பெறுமதி |
|---|---|---|---|
| பலசரக்குக் கடை | | | |
| | கொள்ளை | 30 | 9767693 |
| | தீவைப்பு | 15 | 12240240 |
| புடைவைக் கடை | | | |
| | கொள்ளை | 14 | 13665592 |
| | தீ வைப்பு | 13 | 9017060 |
| மறக்கறிக்கடை | | | |
| | கொள்ளை | 06 | 615442 |
| | தீ வைப்பு | 13 | 1633185 |

அன்றைய தாக்குதலில் ஆலிம் சேனை கிராமத்தை சேர்ந்த நபீர் தப்ரீன்(23) எனும் பல்கலைக்கழக மாணவனும் எம். சுஹைப்(14) எனும் அவரது சகோதரரும் மற்றுமொறு 4 பிள்ளைகளின் தந்தையான குடும்பஸ்தரும் உயிர் இழந்தனர். மேலும் ஒரு முஸ்லிம் படுகாயமடைந்தார். புலிகளின் மோட்டார் தாக்குதலால் முஸ்லிம்களின் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

சம்பவம் நடைபெற முன்னர் மூதூர் பகுதியில் நின்று கொண்டிருந்த சர்வதேச மனிதாப நிறுவனங்கள் என்று தம்மை கூறிக் கள்ளும் 'ஸோஆ' *(ZOA)* 'ஜிடிஇஸட்' *(GTZ)* மற்றும் ஐக்கிய நாடு *(UN)* போன்றவற்றின் ஏழு வாகனங்கள் மூதூரிலிருந்து தப்பி ஓடி வந்து கிளி வெட்டி தமிழ் பகுதியில் நின்று கொண்டு வேடிக்கை பார்த்தன. இது எந்தளவு அவர்கள் புலிச்சாயம் பூசிக் கொண்டு மனிதாபிமான சேவை செய்கிறார்கள் என்பதை காட்டுகின்றதல்லவா?

26 ஆம் திகதி தாக்குதலுக்குப் பின்னர் 29 ஆம் திகதி இரவில் முஸ்லிம் கிராமங்களிலுள்ள வீடுகள் மீது புலிகள் கைக்குண்டு தாக்குதல் நடத்தினர். ஹைதர் பகுதியில் 3 வீடுகள் மீது கைக்குண்டுகள் வீசப்பட்டன.



அச்சம்பவத்தில் 6 வயது சிறுவன் ஒருவன் உயிரிழந்தான் 8 முஸ்லிம்கள் படுகாயமடைந்தார்கள்.

புலிகளின் வட கிழக்கு தமிழீழ தாயக கோட்பாட்டிற்கு மூதூர் பகுதி கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். அதனாலேயே அப்பகுதியை நோக்கி புலிகளின் கவனம் திரும்பி உள்ளது.

எப்பாடுபட்டாவது மூதூர் பகுதியில் உள்ள உயிரழிவுகளையும் பொருளாதார அழிவுகளையும் ஏற்படுத்தி அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்துவதே புலிகளின் நீண்டகால இலக்காக இருந்திருக்கின்றது. அவ்விலக்கின் ஒரு கட்டமே மூதூர், வாழைச் சேனை கலவரத்தை பயன்படுத்த முனைந்ததாகும்.

---

**குருதிபடிந்த.....**

அதிகாரிகள இந்த நோயாளியை அழைத்துச்சென்றனர். அவர்கள் கொழும்பு பொலிஸ் நிலையமொன்றுக்கு சொந்தமான லேண்ட் குருசர் வகையைச் சேர்ந்த ஜீப் ஒன்றின் மூலமும் *M.E.B.* என்று பெயர் குறிக்கப்பட்ட வேன் ஒன்றின் மூலமுமே வந்ததாக தெரியவந்துள்ளது. கொலைக்காக பயன்படுத்தப்பட்ட டிபெண்டர் வகையைச் சேர்ந்த இரண்டு வாகனங்களும் வேனும் 07ஆம் திகதி தெல்தெனிய பிரதேசத்திலுள்ள காட்டுப் புரமொன்றிலிருந்து கண்டெடுக்கப்பட்ன.

இவ்வாறு அரச தரப்பின் உதவியோடும் இராணுவ பிண்ணனியோடும் இன்நிகழ்வுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இவைகளை உறுதிப்படுத்து வதற்கான போதிய ஆதாரங்களும் நீதித்துரைக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. அவ்வாறிருந்தும் முஸ்லிம்களுக்கு நீதி கிடைக்குமோ என்று சந்தேகத்திலேயே காலம் தாழ்த்த வேண்டிய நிலை ஏறபட்டிருக்கிறது.

இப்படுகொலைச் சம்பவத்தின் போது 10 இளைஞர்கள் கொல்லப்பட்டார்கள். அவர்களின் பெயர்கள் பின்வருமாறு,

*1. Z.M. Nazar (19)  2. A.M. Mislar (23)  3. M.I.M. Nazeer (25)*
*4. J.M. Faizer (24)  5. S.M. Rizwan (22)  6. H.M Rizwan (21)*
*7. F. Mohamed (25)  8. I.M.I. Safar Ahamed (25)*
*9. M.I.M. Azwer (26)  10. M.M. Mohideen (31)*

ஒரு சமூகத்தை அடக்குவதன் மூலம் தான் தனது ஆட்சிக் கதிரையைப் பாதுகாப்பது முடியுமானது என்ற மேலாதிக்க எண்ணப்பதிவுக்கு ஏற்பவே மடவளைப் படுகொலைள் நடைபெற்றன எனபதை எமது சமூகம் கவனத்திற் கொள்ள வேண்டும். இம்மேலாதிக்க எண்ணம் அதிகாரங்களை தக்க வைக்க மட்டுமல்ல எம்மை அடிமை சமூகமாக மாற்றுவதற்கும் துணை போகக் கூடியதொன்றாகும். இரு இனங்களும் ஆயுத பானிகளாய் இருக்கும் போது நாம் மட்டும் நிராயுத பானிகளாய் வாழ்கிறோம். எமது அரசியல் தலைமைத்துவத்தையும் பலவீனப்படுத்தும்போது நாம் அடிமைச் சமூகமாக மாறுவோம.

# தீயிலெரிந்த மாவனெல்லை

சிங்கள பேரின வாதிகளால் முஸ்லிம்கள் மீது தொடுக்கப்பட்ட அநியாயங்களில் மாவனல்லை வன்செயல் குறிப்பிடத்தக்க பெறுமானத்தை பெறுகிறது. தமிழின வாதிகளிடமிருந்து மட்டுமின்றி சிங்கள பேரினவாதிகளாலும் முஸ்லிம்களின் இருப்புக்கு அச்சுறுத்தல் நிலவுகின்றது என்பதற்கு மாவனல்லை நிகழ்வு ஒரு சான்றாகும்.

கொழும்பு - கண்டி வீதியில் அமைந்துள்ள மாவனல்லை நகரமானது முஸ்லிம்களின் பலமான கோட்டை என்று கருதப்படுகின்றது. முஸ்லிம்கள் இயல்பிலே பெற்றுள்ள வியாபாரத் துரைத் தேர்ச்சிக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக இந் நகரம் திகழ்கின்றது. சுருசுருப்பு மிக்க வியாபாரச் சந்தையாக இப்பிரதேசம் நிகழ்வதானது பேரின வாதிகளின் உள்ளத்தில் பொறாமையை இயல்பிலே வளர்த்தெடுக்கும்.

மாவனல்லையில் ஒரு கலவரத்தை ஏற்படுத்தி தமது பொராமையை தீர்த்துக் கொள்வதற்காக நீண்ட காலமாக பெறும்பான்மை இனவாதிகள் வழிபார்த்துக் கொண்டிருந்தார்கள். கலவரத்துக்கு தூண்டுதல் அழிக்கும் நோக்கோடு சிறு சிறு அச்சுருத்தல் சம்பவங்களும் பணம் பரிக்கும் நிகழ்வுகளும் தொடர்ச்சியாய் நடந்து வந்துள்ளன. அவ்வாறிருந்தும் முஸ்லிம்கள் கூட்டிணைந்த தற்காப்பு முயற்சியில் ஈடுபாடு காட்டுவதில் பொடுபோக்குத் தனமாக இருந்தார்கள் இதனால் தான் எமது மாவனல்லை படு மோசமான அழிவுக்கு உள்ளானது.

தமிழீழ கொள்கையில் வட கிழக்கு முஸ்லிம்களின் இருப்புக்கான அச்சுறுத்தல் ஒரு பொது நிலைப்பாடாக இருந்த போதிலும் சிங்களத் தேசத்தில் முஸ்லிம்களின் இருப்புக்கான அச்சுறுத்தல் அதன் பொது நிலைப்பாடாக இருந்ததில்லை. இந்தக் கண்ணோட்டத்திலே நெகிழ்வுத் தன்மையுடனே மாவனல்லை நிகழ்வை நோக்குவதே நீதியானதாகும். ஆனால் சிங்கள இனவாதிகளின் திட்டமிட்ட சதியே இது என்பதையும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

## நடந்தது என்ன ?

மாவனல்லை நக்ரின் மத்திய பஸ் தரிப்பிடத்தில் அமைந்துள்ள சிற்றுண்டிச் சாலையொன்றில் சில சிங்களக் காடையர்கள் வழமையாக அடாவடித்தனங்களில் ஈடுபட்டு வந்தனர். 30.04.2001 அன்று இரவு வேளையில் குறித்த சிற்றுண்டிச்சாலைக்கு வந்த காடையர்கள் ஒரு சிறு தொகைப் பணத்தை செலுத்தி பணத்தொகையை விட அதிகமதிப்புள்ள சிகரெட்டுக்களை



கேட்டுள்ளனர். தரமுடியாது என கடைக்காரர் மறுப்புத்தெரிவித்திருக்கிறார். ஆத்திரமடைந்த காடையர்கள் குறித்த கடைக்காரரை தாக்கியுள்னர். அதுமட்டுமல்லாமல்.....

“ஒய தம்பிலாட்ட புளுவன்னம் மெயாவ பேரகண்ட வரெல்லா” (விரும்பிய முஸ்லிம் தம்பிகள் முடிந்தால் முன்வந்து இவனை காப்பாற்றுங்கள்!) என்று சவாலும் விடுத்து விட்டு இன்னும் அந்த நபரை தாக்கியுள்ளனர். இருந்த போதும் முஸ்லிம் சகோதரர்கள் எவரும் எந்த பதில் நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. உடனடியாக இவ்விடயம் தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. மாற்றாந்தாய் மகனாகவே முஸ்லிம்களை மதித்தனர். எனவே மறுநாள் பொலிஸ் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்ட போதும் அது தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையிலும் பொலிஸார் ஈடுபடவில்லை. எனவே இதனால் ஆத்திரமடைந்த முஸ்லிம்கள் பொலிஸாருக்கெதிரான ஆர்ப்பாட்டமொன்றை மறு நாள் காலைமேற்கொண்டனர். மாவனல்லைச் சந்தியில் இடம்பெற்ற இவ்வார்ப்பாட்டம் ரம்புக்கனை வீதியை நெருங்கும் வேலையில் பொலிஸாருக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் கைகலப்புகள் இடம்பெறலாயின. இக்கைகலப்புகளின் போது தயார்நிலையில் இருந்த சிங்களக் காடையர்கள் சிலர் முஸ்லிம்களுடன் மோதலாயினர் ஆரம்பமாக ‘அஜந்தா ஹாட்வெயார்’ தீக்கிரையாக்கப்பட்டது. முஸ்லிம்களின் சொத்துக்கள் சூரையாடப்பட்டன; நிலைமை கட்டுக்கடங்காததால் பிரதேசத்தில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது; இராணுவம் வரவழைக்கப்பட்டது. நிலைமைகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றே இராணுவம் வரவழைக்கப்பட்டது. நிலைமைகள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டன உண்மைதான். முஸ்லிம்கள் வீடுகளுக்குள் சிறைவைக்கப்பட்டனர்; முஸ்லிம்களின் பொருளாதாரத் தளங்கள் தகர்க்கப்பட்டன. முஸ்லிம்களின் முதுகெழும்புக்கே வேட்டு வைக்கும் படலம் கச்சிதமாக நிறைவேறிற்று. இந்நடவடிக்கைகளுக்கெல்லாம் ஆட்பலம் ரம்புக்கன, அரனாயக, கண்டி பகுதிகளிலிருந்து தருவிக்கப்பட்டன. பொருளாதார நிலைகளை தாக்கியழித்த தமது அடதவடித்தனங்களை பன்முகப்படுத்தலாயினர். அவை வீடுகள், வதிவிடங்கள், மாக்கத் தலங்கள் என பரவிற்று.



இனவாத காடையர்கள் மூர்க்கத் தனமாக தமது தாக்குதல்களை புறநகர் பகுதிகளை நோக்கி நகர்த்தினர். ஹிங்குல, கனேதன்ன, உயன்வத்த, ஹெம்மாதகம, திப்பிட்டி, கொட்டம்பிட்டி ஆகிய பகுதிகள் சிங்களக் குண்டர்களின் தாக்குதல்களுக்கு இலக்காகின.



ஹிங்குலோயா, கனேதன்ன பகுதிகளில் முஸ்லிம்களுக்கு சொந்தமான பள்ளிவாயல்கள் தாக்கப்பட்டன. புனித அல்குர்ஆன் பிரதிகள் தீக்கிரையாக்கப்பட்டன. இவ்வாறு இனத்துவேசிகளின் அடாவடித் தனங்களால் மாவனல்ல நகரம் பதற்றமடைந்தது. முஸ்லிம்கள் திட்டமிடப்பட்டு சூறையாடப்பட்டார்கள். அவர்களின் இருப்பு நிலை பற்றி அவர்களுக்கே அச்ச நிலை தோன்றியது. முஸ்லிம் அரசியல் தலைவர்கள் பிரமுகர்கள் அமைப்புக்களின் தலையீட்டினை தொடர்ந்து அரசு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டதை அடுத்து பதற்ற நிலை தனிந்தது.

## விளைவுகள்

| சொத்துக்கள் | முற்றாகச் சேதமானவை | சேதமானவை |
|---|---|---|
| வீடுகள் | | 09 |
| கடைகள் | 55 | 19 |
| (கடைத் தொகுதியுள்ளவை உட்படட) | | |
| சிறு கடைகள் | 30 | |
| வரவேற்பு மண்டபம் | | 01 |
| அரிசி ஆலை | 02 | |
| இறப்பர் தொழிற்சாலை | 01 | |
| ஆடைத் தொழிற்சாலை | | |
| எரிபொருள் நிரப்பு நிலையம் | 03 | |
| பள்ளிவாயல் | | 05 |

**மொத்த இழப்புக்கள் ரூபா 30 கோடிக்கும் மேல் என மதிப்பிடப்பட்டுள்ளது**

வரலாற்றின் எல்லாக் காலங்களிலும் இனவாதச் செயல்களுக்கு உடனடித் தூண்டுதல் வழங்கியிருப்பது தனிப்பட்ட சிலரது சின்னத்தனமான விஷயங்களே!.



வெலிமடையில் நிகழ்ந்த முஸ்லிம் - சிங்கள மோதல்களுக்கு வித்திட்டது ஒரு தேனீர்க் கடை விவகாரம். ஒரு முஸ்லிமின் கடையில் வயிறு புடைக்க உண்ட சில சண்டியர்கள் காசு கொடுக்க மறுத்தார்கள் கலவரம் மூண்டது.

கலகெதரையில் த்ரீவீலர் தரிப்பு நிலையப் பிரச்சினை வாக்கு வாதமாக மாறியது. அடி தடி என பரிணாமம் பெற்று இறுதியில் ஒரு இனக்கலவரமானது.

பன்னலவில் கூட முஸ்லிம் ஒருவரின் ஹோட்டலில் புகுந்த கயவர் கூட்டம் உண்ட பின் காசு கொடுக்க முடியாது எனக் கூறி அடாவடித்தனம் புரிந்தது. அது கைகலப்பாக மாறி பெரும் இன மோதல் நிலையை உருவாக்கி விட்டது.

மாவனல்லையிலும் கடைக்கு வந்த கயவன் கப்பமாக நூறு ரூபாய் கேட்டான் மறுக்கப்பட்டது. கொஞ்சநேரத்தில் வந்தவர்கள் 20 ரூபாயை கொடுத்து சிகரட் கேட்டான். சிகரட்டை கொடுத்து பாக்கி பணத்தைக் கொடுக்கு முன் அடிதடி ஆரம்பமானது. காட்டு மிருகங்கள் நகரத்தினுள் புகுந்தது போன்ற நிலை நகரமே நெருப்பில் வெந்தது.

இந்த எல்லா கலவரங்களின் போதும் சிங்கள இனத்தவர்களுக்கும் அழிவுகள் ஏற்பட்டாலும் பாரிய அழிவுகளும் இழப்புக்களும் ஏற்பட்டது முஸ்லிம்களுக்கே! அப்படி ஒரு திட்டம் சிங்கள இனவாதச் சக்திகளிடம் இருந்துள்ளது! இருக்கின்றது!! என்பது யாவரும் அறிந்த மறுக்க முடியாத ஓர் உண்மை.

மாவனல்லையைப் பொருத்தமட்டில் சில வருடங்களாக முஸ்லிம்களை வழுச் சண்டைக்கு இழுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. அவை பற்றி அவ்வப்போது பொலிஸ் முறைப்பாடு செய்யப்பட்டாலும் கவனத்தில் கொள்ளப்படவில்லை. அதனால் முஸ்லிம்களுக்கு பொலிஸாரிடம் நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது. மௌனமானார்கள்: வேதனைகளை சகித்துக் கொண்டு வாழ முற்பட்டனர்.

**உதாரணத்திற்கு இங்கு சில அநியாயங்களை குறிப்பிடலாம்.**

1998 10.18 ஹிங்குள் ஓயா ஜும்ஆ பள்ளி வாயலில் கடமையாற்றும் கதீப் மௌலவி ஸாலிஹ் அவர்கள் ஓவத்தையிலிருந்து மோட்டார் சைக்கிலில் வீடு திரும்பும் போது நாதெனிய எனும் இடத்திலுள்ள பாலத்தருகில் வைத்து 3 காடையர்களால் தாக்கப்பட்டார். அப்பொழுது அவரது தாடியைப் பிடித்திழுத்த கயவர்கள் சட்டையையும் கிழித்துள்ளனர்.

2000.01.06இல் மாவனல்லையில் இ.போ.ச.வில் மேற்பார்வையாளராகக் கடமையாற்றும் எம்.எச்.எம் ராஸிக் என்பவர் கடமை நேரத்தில் காரியாளயத்தில் சக ஊழியர்கள் மத்தியில் காரணம் இன்றி அடித்து காயப்படுத்தப்பட்டுள்ளார்.

2000.04.24ல் எம்.பீ.எம். ஹபீழ் என்பவருக்குச் சொந்தமான

சிட்டி-கொம் கொம்யூனிகேசன் அடித்து நொருக்கப்பட்டது.

2000.08.12ல் கடலை வியாபாரம் செய்யும் எம்.எச்.எம். அக்தாப் என்பவர் அவர் தினமும் தனது வியாபாரத்தை மேற்கொள்ளும் இடத்தில் "இனி வியாபாரம் செய்யக் கூடாது" என்று கூறப்பட்டது மட்டுமல்லாது அவரதுகடலை வண்டியும் அடித்து நொருக்கப்பட்டது.

2000ஆம் ஹஜ் பெருநாளன்று இரவு ஏ.எம்.எம். ராஸிக் என்ற பழ வியாபாரியை 'தம்மிடம் பழம் வாங்குவதில்லை' என்ற சாட்டில் அடித்து துன்புறுத்தி, அவரது கடையையும் உடைத்து நொறுக்கி விடுகிறார்கள் நால்வர். அதன் பின் அவர் கடையே போடவில்லை.

2000.11.29ல் மத்திய சந்தையில் உள்ள 'சிட்டி பெயின்ட்' ஜவுளிக் கடை உரிமையாளர் முபாரக் ஹாஜியார் இந்தியா சென்றிருந்த போது அவரது கடைக்குள் புகுந்து காடையன் அப்போது கடையில் இருந்த *A.W.M* வஸீர் என்பவரைத் தாக்கியதுடன் கடைக்கும் சேதம் விளைவித்துவிட்டு சென்றுள்ளான்.

பொதுத் தேர்தல் நடந்து முடிந்து 10 நாட்களின் பின் மாவனல்லை எம்.எஸ் பில்டிங் கார் பாக்கில் தனது வேனில் அமர்ந்திருந்த *M.S.M.*ஷாமில் என்பவரை ஒரு காடையன் தலைமையில் வந்த கோஷ்டியொன்று தாக்கி விட்டுச் சென்றுள்ளது.

2000.12.20ல் (புனித நோன்பு 24ல்) மாவனல்லை பஸ் தரிப்பு நிலையத்தில் வைத்து தப்லீக் ஜமாஅத் ஊழியர் ஏ.எல்.ஏ. கபூர் என்பவரின் தொப்பியை கழற்றி சேற்றில் வீசி காலால் மிதித்து கசக்கினான். ஒரு கயவன். அப்படி செய்வது நல்லதல்ல எனக் கூறிய முன்னாள் பொலிஸ் ரிஷர்வ் கான்ஸ்டபிள் எம்.ஐ. ஹாமிம் என்பவரை கழுத்தை வெட்டிக் காயப்டுத்தினர்கள். அல்லாஹ்வின் அருளால் உயிராபத்து ஏற்படவில்லை.

மாவனல்லை முஹம்மதியா ஹோட்டல்- நைட் கடையில் கடனுக்கு சிகரட் கேட்டு கொடுக்காததால் உரிமையாளர் தாக்கப்பட்டு கடைக்கும் சேதம் விளைவிக்கப்படுகின்றது. அன்று மூடிய கடை மூடியதுதான் திறக்கப்படவில்லை.

மற்றொரு நைட் கடைக்கு கொழும்பிலிருந்து வந்த முஸ்லிம் பிரயாணிகள் கேலியும் கிண்டலுமாக தொல்லைக்கு ஆளாக்கப்படுகின்றனர். பின்னர் மோதல் ஏற்படவே அவர்கள் வந்த வாகனத்தின் முன்கண்ணாடி உடைக்கப்பட்டு துரத்தப்படுகிறார்கள்.

முஸ்லிம்களின் த்ரீவீலர்களில் ஏறி ஊர்வலம் சுற்றி விட்டு வெறுங்கையுடன் விரட்டி விடப்பட்ட சந்தர்ப்பங்கள் எத்தனையோ. பணம் கேட்க முடியாது; கேட்டால் கிடைப்பது பணமல்ல, அடியும் உதையும், வெட்டுக் காயங்களும்தான்.

இவை தவிர பொது இடங்களில் முஸ்லிம் பெண்கள் பாடசாலை மாணவிகள் அவமானப் படுத்தப்பட்ட நிகழ்வுகளும், அவர்களது பர்தாவை இழுத்த இம்சித்த நிகழ்வுகளும் பல உள்ளன. **27ஆம் பக்கம் பார்க்க...**



# தாக்கப்பட்ட பேருவளை

கடந்த ஏப்ரல் 5ம் திகதி வெள்ளிக் கிழமை முஸ்லிம் மீனவர்களுக்கும் சிங்கள மீனவர் குடும்பம் ஒன்றுக்குமிடையில் பாதை தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சையே இறுதியில் இனக்கலவரமாக விஸ்பரூபம் எடுத்தது. "மருதானை" பேருவலை நகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு பிரதேசம். முஸ்லிம்களை பெரும்பான்மையாக் கொண்ட இப்பிரதேசத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில சிங்களக் குடும்பங்கள் வாழ்கின்றன. இது கடற்கரைக்கு சமீபமாக அமைந்திருக்கின்றது.

இப்பகுதியில் கடற்கரைக்கு அண்மித்து அமைந்துள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணியிலே மிக நீண்டகாலமாக சிங்களக் குடும்பம் ஒன்று வாழ்ந்து வருகிறது. இவர்களுடன் முஸ்லிம்கள் மிக நெருக்கமாக உறவுகளைப் பேனி வந்தனர்.

சில வருடங்களுக்குப் முன்பு இக்காணி தொடர்பில் வெளியிடப்பட்ட சட்டத்தீர்ப்பிற்கிணங்க சிங்களக் குடும்பத்திற்கு 14 பேர்ச் நிலம் வழங்கப்பட்டது. அதே நேரம் இந்தக் குடும்பத்தினரும் மீனவர்களும் பயன்படுத்துவதற்காக பொதுப்பாதை ஒன்றும் 3 மீற்றர் நீளத்தில் ஒதுக்கப்பட்டிருந்தது.

எனினும் சிங்களக் குடும்பத்தினர் இப்பாதை தொடர்பில் பல பிரச்சினைகளை ஏற்படுத்தியதோடு தமக்கு மின் இணைப்பு பெறுவதற்கான மின்கம்பங்களை சம்பத்தப்பட்ட நிறுவனங்களின் அனுமதியின்றி பாதையில் நாட்டியதனைத் தொடர்ந்து முஸலிம் மீனவர்களும் சிங்களக் குடும்பத்தினருக்குமிடையே மோதல் ஏற்பட்டது. இம் மோதல் போத்தல், கல்வீச்சுக்களோடு ஆரம்பித்தது. பின் சிலர் காயப்படும் அளவுக்கும் வீடுகள் தாக்கப்படும் அளவுக்கும் வளர்ந்தது.

இச்சந்தர்ப்பத்தில் பிரச்சினையை சுமுகமான நிலைக்கு கொண்டுவருவதற்காக பொலிஸ் வரவழைக்கப்பட்டது. என்றாலும் பொலிஸாரினால் நிலமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியாது போனதோடு பொலிஸுடன் தனிப்பட்ட குரோதம் வைத்திருந்த சிலர் பொலிஸை தாக்க இதனை சந்தர்பமாக பயன்படுத்திக் கொண்டனர். இது பிரச்சினையை மேலும் வளர்க்கக் காரணமாகியது.

இச்சம்பவத்தில் முஸ்லிம் இளைஞர்கள் முன்யோசனையின்றி அவசரப்பட்டு சிங்களக் குடும்பத்தினருடன் மோதியது மட்டுமன்றி அவர்களின் உடைமைகளிலும் கைவைத்ததன் விளைவாகவே மோதல் வலுத்தது.

அதே நேரம் மின்கம்பம் நாட்டுவதில் ஏற்பட்ட பிரச்சினை பின்பு இனமோதலாகவெடித்ததற்கு சிங்கள்க் குடும்பம் மற்றும் பொலிஸாரின் பக்கச்சார்பான நடவடிக்கைகளும் கூட கரணமாக அமைந்ததையும் யாறும் மறுத்து விட முடியாது. ஏனெனில் பிரச்சினையின் போது சிங்களக் குடும்பம்

பயன்படுத்திய பொருட்களையும் இரசாயனக் கலவைகளையும் நோக்குகின்ற போது அவர்கள் தாக்குதலுக்குமுன்கூட்டியே தயார் நிலையில் இருந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

மருதானையின் மத்தியில் ஏற்பட்ட இவ்வன்முறை பின்னர் மககொட, அலுத்கம, மொரகல்லை போன்ற பகுதிகளுக்கும் காட்டுத் தீ போல் பரப்பப்பட்டது. மொரகல்லை, ஹெட்டிமுல்லை போன்ற பிரதேசங்களில் இருந்த சிங்களக் குடும்பங்கள் படையெடுத்து வந்து முஸ்லிம்கள் வாழுகின்ற பகுதிகளில் வீடுகளைத் தாக்கி சில வீடுகளை எரிக்கவும் செய்தனர்.

மருதானையின் எல்லைப் புறத்தில் சிங்கள இனவாதக் கும்பல்கள் முஸ்லிம்களின் மூன்று வீடுகளை முற்றாக சேதப்படுத்தி, இரு வீடுகளை எரித்ததோடு, அநேக பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றனர். இவ்வன்முறையின் போது தீ மூட்டப்பட்ட வீடுகளை அணைக்க முஸ்லிம் இளைஞர்கள் எல்லை புரத்திற்கு விரைந்த போது பொலிஸாரினாலும் சிங்கள இனவாதக் குண்டர்களினாலும் சுடப்பட்டும் கிரனைட் வீச்சினாலும் தாக்கப்பட்டன.

இத்தாக்குதலில் அஸ்லம் (23), இர்பான் (23) றிழ்வான் (22) மூவரும் கொல்லப்பட்டனர். 14 பேர் கடும் காயங்களுக்கு உட்படுத்தப்பட்டனர். இரு உல்லாசப் பயண கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன. இவற்றின் பெறுமதி சுமார் 10 இலட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது தவிர முஸ்லிம்களுக்கு சொந்தமான இரண்டு இயந்திர படகுகளும் முற்றாக சேதப்படுத்தப்பட்டன.

வன்முறை பரவிய மஹகொடையில் வைத்து முஸ்லிம் இளைஞர்கள் சிலர் ஹெட்டிமுல்லையைச் சேர்ந்த சிங்களக் குண்டர்களால் தாக்கப்பட்டு, இரு கடைகளும் எரிக்கப்பட்டன. இதனால் சுமார் ஒரு இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இது தவிர வீடொன்றும் முற்றாக எரித்து நாசமாக்கப்பட்டதுடன் 3 வீடுகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. 2 பேர் காயப்படுத்தப்பட்டனர்.







மொறகல்லைப் பகுதியில் சிங்கள இனவாதிகள் ஒன்றினைந்து வாகனங்களில் பயணம் செய்த முஸ்லிம் பொது மக்களை அடையாளப்படுத்தி அவர்களைத் தாக்கியதோடு வாகனங்களையும் சேதப்படுத்தினர். இத்தாக்குதலில் பெண்களும், மதகுருமாரும் ஈடுபட்டதாகத் ததாக்ககுண்டவர்களின தரப்பிலிருந்து தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக ஜே.வீ.பி உறுப்பினர்கள் இதில் மும்முரமாக இருந்தார்கள் என சில நடுநிலையான சிங்கள சகோதரர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறு வாகனங்களில் சென்றபோது தாக்கப்பட்டவர்கள் சுமார் 75 பேருக்கும் அதிகமானோர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இப்பிரச்சினையில் எவ்விதத்திலும் தொடர்புபடாத சிங்கள மக்கள் எவருமே முஸ்லிம் பிரதேசங்களை கடந்து சென்ற போது தாக்கப்பட வில்லை என்பதும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. இத்தகைய பாரிய இழப்புக்களையும் சேதங்களையும் ஒரு சில மணித்தியாளங்களுக்குள் முஸ்லிம்கள் எதிர் கொள்ள வேண்டிய அளவுக்கு சிங்கள இனவாத சக்திகள் முஸ்லிம்களுக்கு எதிராக நிறுவன மயப்பட்டு செயற்பட்டார்கள் என்பதை மருதானை சம்பவம் நமக்கு தெளிவாக உணர்த்தி நிற்கிறது.

நாடு முழுவதும் பேரினவாதிகள் திட்டம் தீட்டி இயங்குகின்றனர். சிங்கள ஊர்களுக்கு மத்தியில் செல்வச் செழிப்புடன் வாழும் பேருவலை முஸ்லிம்கள் மீது ஒரு பார்வை இவர்களிடம் இருக்கவே செய்யும். ஆதலாலே சின்னப் பிரச்சினைகளையும் பெரிதுபடுத்தி அழிவுகளை உருவாக்க நினைக்கிறார்கள்.

**பேருவளையில் முஸ்லிம் அரசியல் வாதிகளின் செல்வாக்கு மிகுதியால் பாரிய அழிவுகளை முஸ்லிம்களுக்கு ஏற்படுத்துவதில் பின்னடைவு காணப்படுகிறது. இச் செல்வாக்கை இப்பிரதேச முஸ்லிம்கள் இழக்கும் போது பாரிய இனச் சுத்திகரிப் பொன்றை எதிர்பார்க்க வேண்டும் என்பதை இவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். ஆதலால் முன்னேற்பாடு அவசியமென்றால் மிகையாகாது.**

முழுமையாக வியாபார சிந்தனையிலேயே மூழ்கி இருக்கும் பேருவலை முஸ்லிம் சமூகம் தம்மை சுற்றி இருக்கும் அபாயங்களை சிந்தித்து ஆக்கபூர்வமான தீர்மானங்களைப் பெற முடியாத பலவீனமான நிலையிலேயே இருக்கிறது. இங்குள்ள இஸ்லாமிய இயக்கங்கள், தரீக்காக்கள் இவ்வபாய உணர்வுகளுக்கான தீர்வுகளை மக்கள் மத்தியில் முன்வைக்காமல் இருப்பதானது முஸ்லிம்களின் சொத்துக்களை, உரிமைகளைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளை ஏற்படுத்துவது இஸ்லாமியப் பணிகளில் முக்கியமற்ற செய்முறைகளாகவே இருப்பதைப் போன்ற மாயையே மக்கள் மத்தியில் இஸ்லாமிய இயக்கங்களின், தரிக்காக்களின் இந்நிலைப்பாடு காட்டுகின்றன.

# குருதி படிந்த மடவலை

2001ஆம் ஆண்டு பாராளுமன்ற பொதுத்தேர்தலின் போது பொதுஜன ஐக்கிய முன்னனி தன்னை ஆட்சியில் ஸ்தீரப்படுத்திக்கொள்ள கடுமையான சவால்களை முறியடிக்க வேண்டியிருந்தது. முஸ்லிம் அரசியலின் பலத்தை குறைப்பதும், கண்டி மாவட்டத்தில் றவுப் ஹகீமை தோல்வியுரச் செய்வதுமே அவற்றில் பிரதானமாகும்.

எதிர்வரும் அபாயத்தை முன்னமே உணர்ந்திருந்த அப்பிரதேச முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் வாக்குச் சாவடிகளில் பலத்த பாதுகாப்புடன் ஆயத்தமாக நின்றிருந்தனர். அதேவேளை இலங்கை இராணுவப் படைக்கு சொந்தமான திணைக்களம் ஒன்றின் பல படைவீரர்களும் போராட்டத்தில் ஈடுபட தயாராகிக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு எரி சக்தி, மின்வலு, புத்தசாசனம் போன்ற அமைச்சுகளிலிருந்து தேவையான வாகனங்களும் வழங்கப்பட்டிருந்தன. எல்.எம்.ஜி. வகையைச் சார்ந்த இயந்திரத் துப்பாக்கிகள், *T* 56 துப்பாக்கிகள் கிரணைட் கைக்குண்டுகள் போன்றவை அவர்களின் கைவசம் வழங்கப்பட்டிருந்தன.

*Operation Kandy* தாக்குதலுக்கு உத்தரவு பிரப்பிக்கும் கொமாண்டோவாக அமைச்சரொருவரின் புத்ததிரர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். கொழும்பிலுள்ள பாதால உலக அங்கத்தவர்கள் அவரின் நண்பர்களாவர். படைப் பொலிஸ் தரப்பைச் சேர்ந்த அதிகாரிகள் அவருடன் நெருங்கிய தொடர்புகளை பதவியுயர்வுகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் வைத்திருந்தனர். இவ்வாறு திட நம்பிக்கை வைத்து நற்பு வைத்திருந்த குழுக்களை இம்முறை தேர்தலுக்கு ஈடுபடுத்துவது சிறமமானதாக தெறியவில்லை.

பொதுத் தேர்தல் நடைபெற்ற டிசம்பர் 05ஆம் திகதி முதல் இவ்வாயுதம் தாங்கிக் குழுக்கள் கண்டி முழுவதையும் ஒரு யுத்தக் கலமாக பரினமிக்கச் செய்தனர். உண்மையில் அங்கே தேர்தல் நடைபெறவில்லை என்றே கூற வேண்டும். வடமாராட்சி யுத்தம் என்று கூறுவதில் எந்த வித பிழையுமில்லை.

உடதலவின்ன ஜாமிஉல் அஸ்ஹர் வித்தியாலயத்தின் வாக்குச் சாவடிக்குள் சட்ட விரோதமாக நுழைந்த காடையர்கள் அங்குள்ள 3 பெட்டிகளை எடுத்துச் செல்ல முயற்சித்தனர். நாளாபுறமும் வேட்டுக்களை தீர்த்து வாக்குப் பெட்டிகளை திருடிச் செல்ல முற்பட்ட போது பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்ட இளைஞர்கள் பயத்தினால் பின் வாங்கவில்லை. ஏற்கனவே சேகரித்து வைத்திருந்த கற்களாலும், பொல்லுகளாலும் வன்முறையாளர்களாய் தாக்கினர். மகாவளி கங்கையின் அருகே வன்முறையினருக்கும் இளைஞருக்கும் இடையே நடந்த மோதலின் போது வன்முறையில் ஈடுபட்ட மூவர் தாக்குதலுக்கு உற்பட்டு ஆற்றில் நீந்திச் சென்றனர். அவர்கள் அமைச்சருடைய புத்திரரின் வன்முறைக் குழுவின் உறுப்பினர்கள். அவர்கள் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டனர்.



3 வாக்குப்பெட்டிகளை கைப்பற்றிக் கொண்ட குண்டர்கள் படிப்படியாக அவர்களுக்கு எதிரான தாக்குதல் மும்முறம் அடையவே அவர்களின் வாகனத்தில் ஏறிப் புறப்பட்டனர்.

இப்பெட்டிகள் திருடப்பட்டதையடுத்து மடவளை வாக்குச் சாவடிகளுக்கான பாதுகாப்பை உறுதிப்படும் படி அமைச்சர் றவுப் ஹகீம் அவர்கள் தனது இளைஞர் குழுவை வேண்டிக்கொண்டார். அங்கே பாதுகாப்பு பழப்படுத்தப்பட்டுள்ளதை அறிந்த குண்டர்கள் வாக்குப் பெட்டிகள் கொண்டு செல்லப்படும் போது அவற்றை பலாத்காரமாக பரிக்க திட்டம் தீட்டினர்.

05ஆம் திகதி மாலை மடவளை வாக்குச்சாவடியிலிருந்து வாக்குப்பெட்டி கண்டியை நோக்கி புறப்பட்டுக்கொண்டிருந்த போது அதனை பாதுகாக்கும் நோக்கில் மடவளையிலிருந்து இளைஞர் குழுவொன்று அடங்கிய வாகன மொன்றும் அதனை பின் தொடர்ந்து சென்றது. "டிபென்டர்" வகையைச் சேர்ந்த 2 வாகனங்களும் மற்றுமொரு வேனும் தோன்றி இளைஞர் அடங்கிய டொல்பின் வகையைச் சார்ந்த வேனை பின்தொடரலாயின. டிபென்டர் வகையைச் சேர்ந்த வகையில் ஒன்று மெருன் நிறமுடையது. மற்றது பச்சை நிறமுடையது.

இளைஞர்களை ஏற்றிச் சென்ற வாகனத்தை முந்துவது போல் பாசாங்கு செய்த டிபென்டர் வகையைச் சேர்ந்த வாகனத்தில் யன்னலினூடாக இயந்திரத் துப்பாக்கி ஒன்று தோன்றுவதை அவதானித்த சாரதி தனது கோஷ்டியினருக்கு உயிராபத்து நெருங்கியிருப்பதனை உணர்ந்தார். உடனே டிபென்டர் வாகனத்தை முந்திச் செல்ல விடாது தனது வாகனத்தை வேகமாக செலுத்த முற்பட்ட போது குண்டுகள் சாராமாறியாக பொலிந்தன.

சாரதிக்கருகே அமர்ந்திருந்தலர் சாரதியின் மேல் மரணித்து சாய்ந்தார். சாரதியால் வாகனத்தை கட்டுப்படுத்திக்கொள்ள முடியவில்லை. வேகமாக ஒரு மின்சாரக் கம்பத்தில் மோதி நின்றது. வாகனத்தில் பிரயாணம் செய்த எவராலும் உயிர் தப்ப முடியவில்லை. ஆயுதம் தாங்கிய குண்டர்கள் டொல்பின் வாகனத்தில் கதவுகளைத் திறந்து டீ 56 ரக துப்பாக்கியால் மீண்டும் சுட்டனர். துளைகளால் நிரம்பிய வாகனம் ஒரு மகாவளி போல் காற்சியளித்தது. அவர்களின் உடலில் சிறு பாகங்கள் ஆங்காங்கே சிதறிக் காணப்பட்டன. துப்பாக்கிச் சூட்டுகளிலிருந்த தப்பிய ஒரு இளைஞன் சடளங்களுக்கிடையிலிருந்து இழுத்தெடுக்கப்பட்டு அவ்விளைஞனின் நெற்றிக்கு வேட்டு வைக்கப்பட்டது.

தாக்குதல் அத்தோடு முற்றுப் பெறவில்லை. மிலேற்சத்தனமான கொலையை வேறு பக்கம் திசைதிருப்பும் நோக்கில் கொலைகாரார்கள் இறந்த இளைஞர்களின் கைகளில் கிரணைட் குண்டுகள் வைக்கப்பட்டன. பின்னர் கொலைவெறியர்கள் இடத்தை விட்டுச் சென்றனர். வாக்குச் சாவடியை பாதுகாக்கும் சில இளைஞர்களின் தாக்குதலுக்கு உற்பட்ட குண்டர்கள் சிலர் கண்டி தேசிய வைத்தியசாலையில் போலி விபரங்களை கொடுத்து சிகிச்சை பெற்றனர். 06ஆம் திகதி பிற்பகல் வைத்தியசாகைக்கு வருகைதந்த சில **13.........**

# நாம் அடிமைகளல்ல

சிங்களப் பேரினவாதிகள் தமிழர்களை அடக்கி ஆள முயன்றனர். எம்மை இரு இனங்களுமே அடிமைகளாக மாற்றியமைக்க முயல்கிறார்கள்.இது திரை மறைவில் நீண்ட காலமாய் இடம் பெற்றாலும் தற்போது வெளிப்படையாக நடைமுறைக்கு வந்துள்ளன. அவற்றின் வெளிப்பாடுகளே எம்மீது திறிக்கப்படும் கலவரங்களாகும். சிங்களத் தேசத்திலிருந்து எம்மீது விதிக்கப்படும் அடிமைத்துவத்தை விட தமிழ்ப்பகுதியிலிருதே நிர்ப்பந்திக்கப்படும் அடிமைத்துவமே உயிர்ப்பானதாய் இருக்கிறது.

## தமிழீழத்தின் அடிமைத்துவ வாதம்

நாம் தமிழீழப் பிரதேசத்தில் வாழும் காலமெல்லாம் தமிழினத்தின் அடிமைத்துவ வாதத்திற்கு நாம் தலை சாய்க்க வேண்டி ஏற்படும். தமிழீழ கொள்கையில் நாம் இரண்டாம் தரப்பாக நோக்கப்படுவதே தமிழினத்தின் அடிமைத்துவ வாதத்தில் கட்டுண்டு வாழ எம்மை நிர்ப்பந்திக்கிறது. இம்மேலாதிக்க வாதம் ஈழக் கொள்கையில் ஊரிப் போன எண்ணக்கரு என்பதற்கு க.ப தமிழ்ச் செல்வன் வெளியிட்ட கருத்து ஆதாரமாய் இருக்கின்றது. "கிழக்கு மாகாண மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள வரி விளக்கு ஒரு சலுகையே. அவர்களின் தலைவர்கள் *(SLMC)* கேட்டதற்கு நாம் வழங்கிய ஒரு கௌரவமே அது" என்ற கருத்து வெளியீடானது எம்மீது மேற்கொண்டு வரும் மேலாதிக்க எண்ணத்தை தெளிவு படுத்துகிறது. "வட மாகாண முஸ்லிம்கள் வந்தவுடனேயே வரி செலுத்தியாக வேண்டும்" என்ற மற்றொரு கூற்றும் அவரால் வெளியிடப்பட்டுள்ளது. சிங்கள தேசத்திற்கும், தமிழீழத்துக்கும் வரி செலுத்தி வாழும் அடிமை சமூகமா நாம்?

இலங்கை தமிழீழத்துக்கு வரி அறவிடும் உரிமையை வழங்க வில்லை. அவ்வாறு வழங்குவது இலங்கையின் இறைமைக்குப் பாதகமாகும். இலங்கை இரண்டு தேசங்களாக அடையாளப் படுத்தப்பட்டு விடும். அவ்வாறு இருக்க விடுதலைப் புலிகள் வரி அறவிடும் உரிமையைத் தானாகப் பெற்றது ஒரு பயங்கரவாதமாகவே கணிப்பிட வேண்டும். அதுவும் இன்னோர் சமூகத்தின் மீது அது திணிக்கப்படுவதும் பயங்கரவாதமாகவே கணிப்பிட வேண்டும். இவ்வாறிருக்கு இலங்கை நாடு விடுதலைப் புலிகளை பயங்கரவாதத் தடைச்சட்டத்திலிருந்து அகற்றுவது எமக்குச் செய்யும் துரோகமாகும். தாய்லாந்துப் பேச்சு வார்த்தையை முன்னிட்டு தற்காலிகமாக ஆவது தடைச்சட்டத்தை நீக்க முயலும் அரசாங்கம் புலிகளின் வரி அரவிடலை கைவிட நிர்ப்பந்திப்பது எமக்குச் செய்யும் சேவையாகும். அதையும் தாண்டி நாட்டின் இறைமையின் கௌரவத்தை பாதுகாப்பதாகவும் அமையும்.



சிங்கள தேசம் சிங்கள மக்களுக்கு உள்ளது போன்று அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் சகல உரிமைகளோடும் நாம் அரசியலில் ஈடுபட சகல வித சலுகைகளையும் தந்துள்ளது. அத்தோடு எமக்கு போதுமான சேவைகளையும் வழங்குகிறது. அதலால் நாம் சிங்களத் தேசத்தில் வரி செலுத்த வேண்டுவது அநியாயமில்லை. மாறாக தமிழீழம் இடைக்கால நிர்வாகத்திற்குப் புலிகளிடம் ஒப்படைக்கும் போது எம்மையும் சம அந்தஸ்தோடு நோக்குமா? என்பது கேள்விக்குறியே காரணம் தமிழீழத்தில் வாழும் நாம் அவர்களின் மன்னை தந்திரத்தால் அபகரித்துக் கொண்டதாகவே அவர்களிடம் எண்ண அலைகள் காணப்படுகின்றன. எனவே தமிழீழ இடைக்கால அரசும் எம்மை அடிமைகளாகவே நோக்கும் என்பதில் ஐயமில்லை.

### எம்மீது நிர்ப்பந்திக்கப்படும் நம்பிக்கை

இலங்கை வரலாற்றை நோக்குமிடத்து நாம் சமூகங்களோடு புரிந்துணர்வோடும், விடடுக்கொடுப்போடும், சகிப்புத் தன்மையோடும், பொருமையோடும் ஆரத் தழுவியே வாழ்ந்து வந்திருக்கின்றோம். தவிர்க்க முடியாத சமூகங்களுக்கிடையிலான முரண்பாட்டு நிலைமைகளின் போது நிதானத்தோடும், பொருமையோடும், சகிப்புத் தன்மையோடும் அமைதியடைந்து இருக்கின்றோம்.

நாம் ஏனைய சமூகங்களோடு ஒன்றிணைந்தே இந்நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபட கைகோர்த்து நின்றோம். எமது அரசியல் வரலாறும் ஆரம்பத்தில் அவ்வாறே ஏனைய சமூகங்களோடு இரண்டரக் கலந்ததாகவே காணப்பட்டது. ஆனால் இவ்வாறான ஒற்றுமை எம்மை நீண்ட காலம் இணைத்திருக்கவில்லை. ஏனெனில் அவ்வாறான இணைவின்போது எமக்கு போதிய திருப்திகள் கிட்டவில்லை. எமது அபிலாசைகள் நிறைவேறவில்லை. எம்மை சமத்துவத்தோடு நோக்கவில்லை. எமது தேவைகள் புறக்கணிக்கப்பட்டன. எனவேதான் தனித்துவ அரசியல் பற்றி சிந்திக்க நிர்ப்பந்திக்கப்பட்டோம். அதில் நீண்ட தூரம் பயணித்தும் இருக்கின்றோம்.

அண்மைக் காலங்களில் எம்மீது விதிக்கப்படுகின்ற அநியாயங்கள், ஆயுத பலாத்காரங்கள் எல்லாம் எமது இருப்புக்கான அச்சுறுத்தல்கலாகவே நாம் காண்கின்றோம். எவ்வாறு தனியரசியலுக்கு நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோமோ அவ்வாறே ஆயுதபாணியாக மாறுவதற்கும் நிர்ப்பந்தங்கள் தோற்றுவிக்கப படுவதாக நாம் உணர்கின்றோம். அதற்கு நாம் அவ்வளவு தூரம் விருப்பமில்லை. என்றாலும் எமது இருப்பே அச்சுறுத்தப்படும்போது நிராயுதபாணியாய் நின்று தற்கொலை செய்து கொள்ள நாம் மட்டுமல்ல எம் நிலமையில் இருக்கும் எந்தச் சமூகமும் விரும்பாது என்பதே சமூகவியல் விதியாகும்.

### எமது போராட்டத்தின் இலக்கு

தமிழ் சகோதரர்களின் போராட்ட இலக்கு சிங்கள இன வாதிகளாகவே காணப்பட்டது. ஆனால் எமது போராட்டத்தின் இலக்கு தமிழ் இன வாதிகளாகவே இருக்க வேண்டிய தன்மையை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் சிங்கள இன வாதிகளால் நாம் அச்சுறுத்தப்படும் ஒழுங்கு வேறு. தமிழ் இன வாதிகளால் நாம் அச்சுறுத்தப்படும் விதம் வேறு. சிங்கள இனவாதிகளால் நாம் இளந்ததை விட தமிழினவாதிகளால் நாம் இழந்ததே அதிகம். இவ்வதிக இழப்பே ஆயுதபாணிகளாக நாம் மாற வழிகோறி நிற்கின்றது.

இதுவரை கால இன முரண்பாடுகளின் போது நாம் சிங்கள சமூகத்தால் வெளியேற்றப்பட்ட சமூகமாக மாறவில்லை. மற்றும் நிரந்தர பாதிப்புக்களை நாம் சந்திக்க வில்லை. ஒரு தசாப்தத்துக்கும் மேலாலான வேதனையை நுகரவில்லை. ஆனால் எம்மை தமிழினவாதிகள் எம் இருப்பிடங்களை விட்டே அகற்றிவிட்டனர். 10 வருடங்களாய் எம் இருப்பிழந்து நாம் அழைக்கழிகிறோம். தமிழீழத்தில் எம்மை குடியேற அனுமதிக்க மாட்டோம் என்று போர்க்காலப் பகுதித் துண்டுப் பிரசுரங்கள், வாய்ப்பேச்சுக்கள் எம்மை எம் இருப்பு பற்றி சிந்திக்க தூண்டியது. எமது சொந்த நிலங்களை தமிழீழ மண்னென்று பறிக்கப் பார்க்கிறார்கள். மூதூர், வாழைச்சேனைக் கலவரங்களில் தமிழீழ போராளிகளின் நேரடி ஈடுபாடு இருந்துள்ளன. தமிழீழம் என்ற எண்ணக்கரு ஆயுத மயப்படுத்தப்பட்டு, அரசியல் மயப்படுத்தப்பட்டும் தலை நிமிர்கின்ற போது எம்மீதுள்ள அவர்களின் மேலாதிக்க சிந்தனை விட்டு அகலாத போது எமது இருப்புக்கு அழிவு வரும் என்பதில் என்னதான் சந்தேகம் இருக்கிறது. எனவேதான், எமது ஆயுதப் போராட்டத்தின் பிரதான இலக்கு எதை நோக்கி குவிந்துள்ளது என்பதை வரலாற்றுச் சிந்தனையோடு நோக்கும் எந்தவொரு ஆய்வாளனும் அது தமிழினவாதிகளே என்று கருதும் நிலை தோன்றும்.

"வடக்கு கிழக்கு எமது தாயகம்" என்ற தமிழ்ச சகோதரர்களின் உரிமைக் கோசத்தில் அவர்களின் "எமது" என்ற நாமத்தில் எம்மையும் உள்ளடக்கியிருந்தால் எம்மீதான இவ்வநியாயங்கள் அவர்களால் நிகழ்த்தப்பட வேண்டிய சந்தர்ப்பமே இருந்திருக்காது. அவர்கள் எம்மை அவர்களின் போராட்டத்தின் ஆரம்பத்திலேயே அவர்களின் போராட்ட வரையரைக்கு அப்பாலே எம்மை வைத்து நோக்கியிருக்கிறார்கள் என்பதை அன்று முதல் இன்று வரையான அவர்களின் எம்மீதான அநியாய நிகழ்வுகள் தெளிவுபடுத்துகின்றன. எனவே தான் தற்போது அவர்கள் எம்மிடம் நீட்டும் நேசக்கரங்கள் சாணாக்கியக் கரங்கள் என்பதை நாம் விளங்கி வைத்திருத்தல் வேண்டும்.

### போராட்டத்தின் தன்மை

நாம் இலங்கையில் போராடப்போகும் போராட்டம் ஒரு நிலத்திற்கான விடுதலைப் போராட்டமல்ல. மாறாக எமது இருப்புக்களை பாதுகாப்பதற்கான போராட்டமாகும், அது ஒரு போதும் கிலாபத்தை நோக்கிய போரட்டமாக



அமையாது. அது ஒரு தற்காப்புப் போராட்டமாகும். என்பதை கருத்தில் எடுப்பது சிறந்தது. வடக்கும் தெற்குமாக சிதறி வாழும் வடக்கில் நாம் அடிக்கடி ஆயுதப் பிரயோகங்களை எதிர்நோக்கிறோம். ஆதலால் அப்பகுதியில் எமது போராட்டம் என்றும் விழிப்புடன் இருக்கும் உயிர்ப்பான போராட்டமாகவே இருக்க வேண்டும். தெற்கைப் பொருத்த வரை இருந்து விட்டு நின்று அச்சுறுத்தலைப் பெற்றுகொள்வதால் விழிப்புடன் இருக்கும் தயார்முறைப் போர்முறையையே கொண்டிருக்க வேண்டும். வடக்கில் நாம் உயிர்ப்பான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றோம் என்று கருத்திற்கொண்டு தெற்கை நிராயுத பாணிகளாய் விட்டுவிடல் சிறப்பல்ல. அது வடக்கு ஒரு பலஸ்தீனம் போன்று தெற்குக்கு காட்ட முனையும். அதாவது எம்மை விட்டு தூரே நிற்கின்ற ஒரு சமூகத்தின் போராட்டமாகவே தெற்கு மக்கள் உணர ஆரம்பிப்பார்கள். இப்போராட்ட சிந்தனைகளை கவனத்திற்கொள்வதோடு எம்மை ஆயுத பாணிகளாய் மாற்றியும் எம் இருப்பை அழிக்க சதி செய்யலாம் என்பதையும் மிகக் கவனமாக புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கையில் நிகழும் சமூகங்களுக்கிடையிலான போரை கவனமாக விளங்கி எமது சமூகம் தயாராகாவிட்டால் பசித்தவன் உணவுத்தட்டை நோக்கி பாய்வது போல பிர சமூகங்கள் எம்மை அழித்துவிட பாயுமென்றால் சந்தேகமேயில்லை.

**எமக்கு வரும் அபாயத்தை அறியாமல் நாம் வியாபார மெத்தையிலே மெய்மறந்து உறங்கும் எமது நிலை பார்த்து எம்மிலிருந்து ஒரு சிந்தனை வாதி படுபயங்கரமாய் அரட்டி அரட்டி எழுப்பப் பார்க்கிறான் நாமோ விழித்துக் கொள்ளாமல் புரண்டு புரண்டு படுக்கிறோம். நாம் நித்திரையிலேயே சமாதியாவோம் என்ற அச்சிந்தனை வாதி தமது நெஞ்சில் இரு கரங்களையும் அடித்துக்கொண்டு கண்ணீர் வடித்தவராக சத்தமிடுகிறார். எனினும் நாம் விழித்துக்கொள்ளவில்லை. இறுதியில் அவர் ஏக்கத்திலே இறந்து விடுகிறார். அவரின் கண்ணீர் துளிகள் எமது கண்களை ஈரமாக்கிய போதுதான் நாம் விழித்துக்கொண்டோம். ஆனால் நாம் தாமதமாகி விட்டோம்.**

**தீயிலெறிந்த....** இந்த எல்லா செயல்களும் காரணமானவர்கள் தான் கடைசியாக முஸ்லிம்களின் பொறுமைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் பவுசுல் அமீர் என்பவரை சித்தரவதை செய்தனர்.

அது முஸ்லிம்களின் பொருளாதாரத்தை நிர்மூலமாக்க பின்னணி சக்திகளுக்கு வழிவகுத்துக் கொடுத்து விட்டது எனலாம்.

மாவனல்லைக் கலவரம் கவனமாக ஒழுங்கு படுத்தப்பட்ட ஒரு திட்டமிட்ட சதியாகும். இக்கலவரத்தின் பின்னணிக் கருப்பொருளாக இனத்துவமும், மதத்துவமும் மறைந்துள்ளதை அவதானிக்லாம். முஸ்லிம்களின் கலாசாரத்தின் அழிவுக்கான அச்சுறுத்தலாகவும் இதைக் கொள்ள வேண்டும்.

# சாந்தி என்பது சர்ச்சை

விரிசலுற்ற நெஞ்சறைகள்
நெரிசல் கண்டன
எங்கள் வாழ்வின் நிஜத்தை
சுவைத்த பின்னர்
இனிமேல்
கீழ் வானில் சாந்தியென்பது சர்ச்சை!

மாமிச ஜடங்களாய்
அட்டைப்பூச்சுக்களுக்கென்றே
அர்ப்பணம் செய்யப்பட்ட
உதிரப்பைகள் நாங்கள்
அடைப்பு குறிக்குள்
அடுப்பு மூட்டு! என்பதும்
விடைகளை மாற்றி
வினாக்களாய் தினிப்பதும்
அந்த உதிரம் சொல்லும் விரயம்....

வடக்கே அனைத்து காரங்கள்
ஈற்றில் வாட்டி வதைத்த
இராவனக் கொடுங்கோல்கள்....
மூதுர், வாழையூர்
கலவரங்களுக்கு நீர் விட்டு
அக்னியால் திருஷ்டி சுட்டவர்களால்
அவர்களுக்கு மட்டுமே அந்நாள்.

கிழக்கின் இரத்தக் கழிவுகள்
வற்றாத ஊற்றுக்களாய்
உணர்வுகள்
மாண்டுகொண்டிருக்கும்
ஊமைக் குழல்களாய்
எங்கோர் மூலையில்
காற்றிலசையும் சாக்கடை
துணியாய் நீங்கள்

எங்கள் வியர்வை மொட்டின்
விலைகளெல்லாம்
உங்கள் போராட்டத்திலும்
உதவுகிறது என்பதும்
அநீதி இழைக்காத எங்களுக்கு
நீங்கள் இதுவரை செய்தது
அநியாயங்களே!

ஆக
ஆறடி உடல்களை
அடகு வைத்து
அடிமைத் தனம் நோக்கிய பயணம்
என்று வரைக்கும்?!



## முடிவுரை

போர்க்காலம் ஓய்ந்துநின்ற போதுதம் இன முறன்பாடுகள், இன முறுகள் நிலை இன்னும் நீங்காத நிலையே காணப்படுகிறது. பல்லின சமூகங்கள் வாழ்கின்ற இன்நாட்டில் பெரும்பான்மை சிறுபான்மையினரையோ அல்லது சிறுபான்மை பெறும்பான்மையினரையோ தப்பெண்ணம், சந்தேகம் கொள்வதும் அதன் அடியான அனமுறன்பாடுகள் மோதல்கள் இன்னும் தொடர்வதாகவே இருக்கின்றன. இதனால் இனனும் இனங்களுக்கு மத்தியில் சுமூகமான நிலை தோன்றவில்லையெ என கருதளாம். இனங்களுக்கிடையில் பெறாமை மனப்பான்மை, கழுத்தருப்புக்கள் கருவெடுப்புக்கள் ஆழவேறூன்றி இருக்கின்றன. இன்நிலை மாறி சுமூகமான, ஐக்கியமான நிலை தோன்ற வேண்டுமெனில் மனித உள்ளங்கள் மாற்றப்பட வேண்டும். உள்ளங்களில் பதியப்பட்டிருக்கின்ற தவரான கருத்துக்கள் மனப்படிவுகள் மாற்றப்பட வேண்டும். இதைத்தான் அல்குர்ஆன் தெளிவாக உறுதிபூண்டு கூறுகின்றது.

"தமது உள்ளங்ளில் இறுக்கின்றவற்றை மாற்றாத வரை அல்லாஹ் ஒரு சமூகத்தை மாற்றியமைக்க மாட்டான்"

என்று அல்குர்ஆன் தனது சமூகவியல் விதியை பரைசாட்டுகின்றது.

தமது சிந்தனைகள் எழுத்தாக்கங்கள் மத போதனைகள் போன்றவற்றினூடாக இன வாதக் கருத்துக்களை பரப்புதல் அதனடியான இனவாத மோதல்களை உருவாக்குதல் போன்றவற்றில் அரசியல் வாதிகள் வரலாற்றாய்வாளர்கள் மதத் தலைவர்கள் பெறும் பங்கு வகிக்கின்றனர்.

இவ்வாறான இன முறன்பாடுகள், வன்முறைகள் மோதல்கள் போன்றவற்றால் கூடுதலாக பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட ஒரு சமூகமாக முஸ்லிம் சமூகம் இருப்பதை வரலாற்றுப் பக்கங்கள் புறட்டிக் காட்டுகின்றன. தென்இலங்கையில் சிங்களப் பெறும்பான்மையினாலும் வடகிழக்கில் தமிழ் ஆயுதக் குழுக்களாலும் இலங்கை வாழ் முஸ்லிம்கள் அதிகமான உயிர்ச் சேதங்களுக்கும் பல கோடிக்கனக்கான சொத்தளிப்புக்களுக்கும் உள்ளாகி தமது உடைமைகளையும், இருப்புக்களையும் தமது பூர்வீக பூமியிலே இழந்து நிற்கின்றனர்.

1915 கண்டிக் கலவரம் முதல் அண்மைய நிகழ்வானன மூதூர், வாழைச்சேனை வரையான நிகழ்வுகள் இதனை உண்மைப்படுத்த போதுமான ஆதாரங்கள் ஆகும். இதுவரை கால அனைத்து வன்முறைகளிலும் முஸ்லிம்கள் தரப்பில் எதிர்கொண்ட இழப்புக்கள் தான் அதிகம் ஆங்காங்கே நடக்கின்ற சிறு சிறு சம்பவங்களை வைத்து சிங்களப் பெறும்பான்மையும் தமிழ் ஆயுதப் பாணிகளும் நிர்வன மயப்பட்டு முஸ்லிம்களை தாக்கி வந்துள்ளனர்.

இந்நிலை தொடருமெனில் இலங்கை தீவில் சமாதான சூழ்நிலை உருவாவது குதிரைக் கொம்பாகவே இருக்கும். ஒரு இனம் பெறும்பான்மையாக

இருக்கின்றது என்பதற்காக சிறுபான்மையினர் தமக்கு பனிய வேண்டும் அல்லது சிறு பான்மையினரின் உரிமைகள் தமது கையாள்கைக்கு உற்பட்டதாகவே இருக்கு வேண்டும் என்ற மனோ நிலை மாற வேண்டும். காலநித்துவ நடைமுறை ஒழிய வேண்டும். எமது அரசியல் தலைவர்கள் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள், புத்தி ஜீவிகள் இப்பணியை முன்னெடுத்துச் செல்வது அவர்களின் கடமையாகும்.

அதேநேரம் சிறுபான்மையாக வாழ்கின்ற இலங்கை முஸ்லிம்கள் இலங்கைச் சூழலில் தமது தஃவாப் பணியை செய்யவேண்டிய பொருப்பைச் சுமந்திருக்கின்றது. எனவே, அப்பணி மாற்று மதத்தினர் மத்தியில் முன்வைக்கப்பட வேண்டும். இலங்கையில் தஃவாவுக்கான அனைத்து வாயில்களும் மூடப்பட்டிருக்கின்றன. அஹ்லாக் என்ற வாயில்களைத் தவிர என்ற ஒரு அறிஞ்சரின் கூற்றுக்கிணங்க இஸ்லாம் எமது தஃவாப் பணி இஸ்லாமிய ஒழுக்கப் பண்பாடுகளினூடாகவே மேற்கொள்ளப்பட வேண்டும். அதன் மூலம் இஸ்லாம் பற்றியும் முஸ்லிம்கள் பற்றியும் நல்லெண்ணத்தை ஏற்படுத்த வேண்டும். இதனூடாக நாடளாவிய ரீதியில் முஸ்லிம்களுக்கெதிராக நடைபெறுகின்ற எதிர்ப்பு மனோ நிலையை நீக்களாம்.

எனவே இதற்காக முஸ்லிம்கள் முதலாவது மேற்கொள்ள வேண்டிய பணி தமது வாழ்வியல் ஒழுங்கை மாற்றி இஸ்லாமிய வாழ்வின் பால் மீள வேண்டிய இருப்பதோடு ஆங்காங்கே எழுகின்ற சிறு சிறு பிணக்குகளின் போது நிதானமாகவும் முன்யோசனையோடும் நடந்துகொள்ள வேண்டிய பாரிய பொருப்பு எம்முன்னால் உள்ளது. இதுவே எம்முன்னால் உள்ள முதற்பணி.


**நன்றி**

- மீள்பார்வை
- அல்ஹஸனாத்
- இலக்கு

இறை நம்பிக்கை கொண்டவர்களே நீங்கள் அல்லாஹ்வுக்கு உதவி புரிந்தால் அவன் உங்களுக்கு உதவி வழங்குவான். உங்கள் பாதங்களை உறுதிப்படுத்துவான்

(முஹம்மத் 07)

இப்பொழுது உங்களுக்கு காயம் ஏற்பட்டுள்ளதென்றால் இதற்கு முன்னர் (உங்கள்) எதிரணியினருக்கும் இதே போன்றே காயம் ஏற்படத்தான் செய்தது. இவைகள் காலத்தின் மாற்றங்களாகும். இவற்றை மக்களிடையே மாறி மாறி வரச் செய்வோம்.

(ஆல இம்றான் 140)